பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 10 செவ்வாய்க்கிழமை 26.08.2025 | அதிர்வு 26

## படகு விபத்தில் இளைஞர் சாவு

**சுண்டிக்குளத்தில் சோகம்**

யாழ். வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் பகுதியில் படகு விபத்தில் இளைஞர் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார்.

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில்

## ரணிலுக்காக இன்று திரண்ட ஆதரவாளர்கள் “அநுர கோ ஹோம்” என விண்ணதிரக் கோஷம்





முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி எதிர்க்கட்சியினர் மற்றும் ரணிலின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

02▶

# பிணையில் வந்த ரணில்



## வழக்கு விசாரணை ஒக்டோபர் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 22 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரின் நோய் நிலைமையைக் கருத்தில் எடுத்த கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம், இன்று அவருக்குப் பிணை வழங்கியது.

பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று பிற்பகல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் திருமதி நிலுபுலி லங்காபுர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ் ஆஜரானார்.

02▶

## ரணிலின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயம்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக எதிர்க்கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரணிலின் ஆதரவாளர்கள்..

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ரணிலின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மூக்கில் காயமடைந்தார்.

அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர், இரத்தம் சொட்டச் சொட்ட அங்கிருந்து வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

## படகு விபத்தில்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சிக் கிழக்கு, சுண்டிக்குளம் பகுதியில் உடப்பு பகுதியைச் சேர்ந்த மைனர் சம்மாட்டியின் கரைவலை வாடியில் இன்று அதிகாலை கரவலை மீன்பிடி நடவடிக்கை இடம்பெற்றது.

அண்மைய நாட்களாக நாட்டின் சில பகுதிகளில் காணப்படும் அசாதாரண காலநிலை சுண்டிக்குளம் கடல் பகுதியிலும் நிலவியது.

இதன்போது மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் கடலின் அலையில் இருந்து படகை விடுவிப்பதற்கு முயன்ற போது அதே படகு அலையில் சிக்குண்டு அந்த இளைஞர் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் உடப்பு பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சின்னத்தம்பி சசிதரன் என்று தெரியவந்துள்ளது.

சடலம் நித்தியவெட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிணையில்...

ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டதரணிகளான திலக் மாரப்பன, அனுஜா பிரேமரத்ன, உப்புல் ஜயசூரிய மற்றும் அலி சப்ரி ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் ரணில் விக்கிரமசிங்க இன்றைய வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராகவில்லை. அவர் சூம் காணொளி தொழில்நுட்பம் மூலம் ஆஜரானார்.

ஆரம்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நோய் நிலைமை அதிகரித்துள்ளதால் உயிராபத்து ஏற்பட்டுள்ளது எனவும், எனவே அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன நீதிமன்றத்தில் கோரிக்கையை முன்வைத்த நிலையில், நீதிமன்றம் ரணில் விக்கிரமசிங்கவின் நோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கியது.

அதன்படி, சந்தேகநபரைத் தலா ரூ. 5 மில்லியன் பெறுமதியான 3 சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.



## ரணிலுக்காக...

”அடக்குமுறைக்கு எதிராக” என்ற பெயரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “அநுர கோ ஹோம்” என்று விண்ணதிரக் கூச்சலிட்டனர்.

இதனால் கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இந்தப் போராட்டத்தால் கொழும்பு கோட்டை முதல் லேக் ஹவுஸ் நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கொம்பனி வீதி உள்ளிட்ட பல வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.



# தியாகி பொன். சிவகுமாரனின் 75ஆவது பிறந்தநாள் தின நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தியாகி பொன். சிவகுமாரனின் 75 ஆவது பிறந்தநாள் தின நிகழ்வு யாழ். உரும்பிராயில் உள்ள அன்னாரின் சிலையில் இன்று காலை நடைபெற்றது.

தியாகி பொன். சிவகுமார் நினைவேந்தல் குழு உறுப்பினர் எஸ்.செந்தூரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.





# இலங்கைக்குக் கடத்தவிருந்த வலி நிவாரணி மாத்திரைகள்!

## 3 பேர் கைது; கியூ பிரிவு பொலிஸார் நடவடிக்கை

(மன்னார் நிருபர்)

உச்சிப்புளி அருகே தலைத்தோப்பு கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக உழவு இயந்திரத்தில் எடுத்துவரப்பட்ட பல லட்சம் வலி மாத்திரைகள் நேற்று (25) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸார் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்து உச்சிப்புளி பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அடுத்த தலைத்தோப்பு கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு வலி மாத்திரைகள் கடத்தப்பட இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கியூ பிரிவு பொலிஸார் தலைத்தோப்பு கடற்கரையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது உழவு இயந்திரத்தில் இருந்து பெட்டிகள் இறக்கிக் கொண்டிருந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் உழவு இயந்திரத்தை எடுத்துக் கொண்டு தப்பி சென்ற நிலையில் கடற்கரையில் விட்டுச்சென்ற தலா 80 கிலோ எடை கொண்ட 10 பெட்டிகளில் லட்சக்கணக்கான வலி நிவாரணி மாத்திரைகள் மீட்கப்பட்டன.

மேலும் இது தொடர்பாக பெருங்குளம் பகுதியை சேர்ந்த மூவரைக்கைது செய்து உச்சிப்புளி பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உழவு இயந்திரத்துடன் தப்பிச் சென்ற நபர்களைக் கியூ பிரிவு மற்றும் உச்சிப்புளி பொலிஸார் தேடி வருகின்றனர்.

# குளவி கொட்டி நால்வர் பாதிப்பு

மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நால்வர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா, லக்சபான தோட்ட – வாழமலை பிரிவில் இன்று மதியம் தேயிலை கொழுந்து கொய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வழமையான 'பேய்க்காட்டு'

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சார்பில் இப்போது அதிக பிரசங்கித்தனமாக -ஆரவாரமான - ஆக்கிரோஷமான - அறிவிப்புகளை விடுப்பவர் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அல்லர். மாறாக, நாடாளுமன்றில் அரச குழுவின் அவைத் தலைவரான அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தான்.

இப்போது வடக்கின் அபிவிருத்தி பற்றியும் பெரிதும் பிரலாபித்திருக்கிறார் அவர். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தலைமையில் யாழ்ப்பாணத்தில் இந்த அபிவிருத்தி திட்டங்கள் வரும் இரண்டாம் திகதி பெருத்த எடுப்பில் ஆரம்பமாகும் என்று அவர் அறிவித்திருக்கிறார்.

அன்றைய தினம் முல்லைத்தீவை மையமாகக் கொண்டு 'தேங்காய் அபிவிருத்தி முக்கோணத் திட்டம்' தொடங்கும் என்று அவர் கூறியிருக்கிறார்.

அன்றைய நாள் சர்வதேச தெங்கு தினம் என்பதால் இப்பணிக்குப் பொருத்தமானதுதான். ஆனால் இந்தத் திட்டம் இப்போதுதான் ஆரம்பிப்பது போல படம் காட்டப்படுகிறது. ரணிலின் அரசாங்கத்தில் 2023 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - மன்னார் - முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் ஒன்றிணைத்து 'தெங்கு முக்கோணத் திட்டம்' அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது பழைய கள்ளை புதிய மொந்தையில் போட்டு நவீன அரசியல் வியாபாரம் போன்று காட்டப் பார்க்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு. ஏற்கனவே தொடங்கிய திட்டத்திற்கு இன்னொரு ஆரவார ஆரம்பம். அவ்வளவுதான்.

மண்டதீவில் ஒரு சர்வதேச விளையாட்டு மைதானம் அமைத்தல், யாழ்ப்பாணம் செயலகத்தில் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள அலுவலகம் திறத்தல் போன்றவை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா வடக்குத் தமிழர்களின் காதில் பூச்சுற்றும் அபிவிருத்தி திட்டங்களாக நமக்குக் காட்டுகிறார்.

உண்மையில் இந்த அரசாங்கத்துக்கு வடக்கை மட்டும் என்றில்லாமல் கிழக்கையும் சேர்த்து அபிவிருத்தி செய்யும் உண்மையான - நேர்மையான - அப்பழுக்கற்ற - அரசியல் காழ்ப்புணர்வற்ற - பேரினவாத அடக்குமுறை மேலாதிக்கச் சிந்தனையற்ற - நோக்கம் இருக்குமானால் அது செய்ய வேண்டியது இரண்டு காரியங்கள்தாம்.

ஒன்று - தமிழர் பிரதேசத்தில் முப்படைகள் மற்றும் பொலிஸ் மூலமும், மேலும் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்ற பலவற்றின் ஆதிக்கத்தின் மூலமும் அரசாங்கம் முறையற்ற வகையில் ஆக்கிரமித்து, கபளீகரம் பண்ணி வைத்திருக்கும் தமிழர் தாயக நிலத்தை, அந்த மக்கள் தாங்களே அபிவிருத்தி செய்து பிராந்தியத்தை மேம்பாடடைய செய்வதற்கு வசதியாக விட்டுக் கொடுத்து விலகி நிற்க வேண்டும்.

அடுத்தது - யுத்தத்தினால் வடக்கு கிழக்கு மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தாலும், அதன் மற்றொரு விளைவாக அவர்கள் வலிமையான புலம்பெயர் சமூகத்தை கொண்டவர்களாக இருக்கிறார்கள். வடக்கு - கிழக்குக்கு நீதியான - நியாயமான - நேர்மையான - நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய - தமிழர்களின் நியாயமான அப்லாஷைகளை நிறைவு செய்யக் கூடிய - அரசியல் தீர்வு ஒன்றை வழங்கி, உங்கள் அபிவிருத்திப் பணிகளை நீங்களே முன்னெடுங்கள் என்று சிங்களத்தின் மேலாதிக்க திணிப்பு இல்லாமல் முன்னெடுப்பதற்கான உறுதிப்பாட்டை வழங்கி அதைச் செயற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் நமது புலம்பெயர் சமூகமே இங்கு முழுமையாக முழு நம்பிக்கையுடன் வந்திறங்கி, முதலீடுகளைச் செய்து வடக்கையும் கிழக்கையும் - தமிழர் தாயகத்தை - இன்னொரு சிங்கப்பூராக அல்லது மலேசியாவின் பினாங்கு மாகாணம் போல நிச்சயம் மாற்றும்.

இந்த இரண்டும் செய்யப்படுமானால் தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கு மட்டும் அல்ல, அதன் மூலம் முழு இலங்கையும் சுபீட்சம் அடைவதற்கான பொருளாதார விருத்தியை இலங்கைத் தீவுக்கே கொண்டு வந்து சேர்ப்பார்கள்.


தமிழர் மண்ணையும் மக்களையும் அடக்கி மேலாண்மை அதிகாரத்துக்குள் துவழ வைத்துக் கொண்டு, வடக்கே வந்து வெறும் கண்துடைப்புக்கு அபிவிருத்தி நாடகம் நடத்துவது பொருத்தமல்ல.

இப்படி வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி என்று ஆரவாரம் பண்ணுவது தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளின் வழமையான 'பேய்க்காட்டு' நடவடிக்கைப் பாணிதான். அதிலிருந்து இந்த அரசும் விலகவில்லை என்பதைத்தான் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் ஆரவார அறிவிப்பும் எடுத்துக்காட்டுகின்றது.



# பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் நினைவு தின நூல் வெளியீடு!





**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

இலங்கை நாட்டில் பௌதீக ரீதியான பல வேலைத் திட்டங்களையும், இடம் பெயர்வு மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பான பறந்துபட்ட அறிவையும் கொண்டிருந்த மன்னார் எருக்கலம் பிட்டியை சேர்ந்த மர்ஹூம் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் 7ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் நினைவுப் பேருரைகள் அடங்கிய நூல் வெளியீடு நேற்று திங்கட்கிழமை (25) புத்தளம் பாலாவி நாகவில்லு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபதில் பாடசாலையின் அதிபர் எஸ்.எம் ஹுஸைமத் தலைமையில் இடம்பெற்றது.

சமூக அபிவிருத்திக்கான ஆய்வு செயலமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக அபிவிருத்திக்கான ஆய்வு செயலமைப்பின் பொருளாளர் ஜனாப் ஏ.ஜி. அனீஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் இஸ்லாமிய கற்கை அரபு மொழிப் பீட, தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம்.எஸ்.எம். ஜலால்தீன் நூல் அறிமுக உரையையும், நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினார்.

கிழக்கு மற்றும் தென் கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையில் மர்ஹூம் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் பங்களிப்பு அளப்பெரியது என்று நினைவு கூறிய பேராசிரியர் எம்.எஸ்.எம். ஜலால்தீன், வடக்கில் ஏற்பட்ட யுத்தம் மற்றும் முஸ்லிம்களின் இடம்பெயர்வு குறித்து அதீத அக்கறையுடன் செயற்பட்ட மிக முக்கியமானவர் மர்ஹூம் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து, மர்ஹூம் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் புதல்வி சட்டத்தரணி எப்.சப்னா ஹஸ்புல்லாஹ்வால் ஏற்புரை நிகழ்த்தப்பட்டது.

நூலின் முதற்பிரதியை ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தரும், புத்தளம் எருக்கலம்பிட்டி பள்ளிவாசல் நிர்வாக சபையின் முன்னாள் உறுப்பினருமான ஜனாப் ரஹ்மத்துல்லாஹ் பெற்றுக்கொண்டார்.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம்.எஸ். எம். ஜலால்தீனுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. மர்ஹூம் பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ்வின் பாரியாருக்கும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபையின் மாணவர் தூதர் பயிற்சித் திட்டம் நுவரெலியாவில்!







(மஸ்கெலியா)

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபை கல்வி அமைச்சுடன் இணைந்து செயல்படுத்தும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு தூதர் திட்டத்தின் நுவரெலியா மாவட்ட மாணவர் தூதர்களை உருவாக்கும் பயிற்சித் திட்டம் நேற்று (25) நுவரெலியா மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

குழந்தைப் பாதுகாப்பு, பள்ளிகளில் சாத்தியமான துஷ்பிரயோகங்களைத் தடுப்பது, குழந்தைப் பாதுகாப்பு குறித்த முடிவெடுக்கும் செயல்பாட்டில் மாணவர் தலைவர்களை ஈடுபடுத்துதல் மற்றும் பள்ளிகளில் குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மாணவர் தூதர்களின் பொறுப்பு மற்றும் தலையீடு குறித்த தேசியக் கொள்கை குறித்து மாணவர் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னகோனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாணவர் தூதர் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பள்ளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குழு கலந்து கொண்டது.

கண்டி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி திருமதி விசாகா முனசிங்க இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு வளங்களை வழங்கினார். நுவரெலியா மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி ஹரேந்திர ஜெயந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைத்தார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் (காணி) திருமதி ஷாலிகா லிடகும்புரா, அரச அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.





# சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் பத்தாம் இலக்கக் கிளைக்குக் கட்டடம்

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பத்தாம் இலக்கக் கிளைக்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை (27) முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும்.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள சங்கத்தின் சொந்தக் காணியில் சுமார் 20 லட்சம் ரூபா செலவில் புதிய கிளைக் கட்டடம் நிர்மாணிக்கப் படவுள்ளது.

சங்கத்தின் தலைவர் கு. ஜனகன் தலைமையில அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறும்.

இந்தக் கிளை நீண்ட காலமாகத் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடக்குக் கிழக்கில் சர்வதேச நீதி கோரிய பேரணிக்கு வலுச்சேர்க்க அனைவரும் ஆதரவு தாருங்கள்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா




**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச நீதி கோரி வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் எழுச்சிப் பேரணிக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை (25) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச நீதி கோரி வடக்குக் கிழக்கில் மக்கள் எழுச்சிப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவுக்கு முன்பாகவும், கிழக்கில் மட்டக்களப்பிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவுக்கு முனபாக எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு பேரணி ஆரம்பமாகி செம்மணி வரை குறித்த பேரணி இடம்பெறவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து உலக நாடுகள் தமது கவனத்தில் கொண்டு சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த 14 வருடங்களுக்கு மேலாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் வீதிக்கு இறங்கி எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்து வந்தோம்.

சர்வதேச நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் எமக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நூற்றுக்கணக்கான உறவுகள் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டுள்ளன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று இதுவரை எமக்குத் தெரியவில்லை.

எமது பிள்ளைகள், உறவுகள் எங்கேயோ இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

எனவே எமக்கு சமூக செயல்பாட்டாளர்கள், தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எமக்குக் குரல் கொடுக்க அணி திரண்டு வர வேண்டும். நாங்கள் தனித்துப் போராடு கின்றமையாலேயே எமக்கு நீதி கிடைக்கவில்லை என்னும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலே எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் சர்வதேச நீதி கோரிய மக்கள் எழுச்சிப் பேரணியை முன்னெடுக்கவுள்ளது.

எனவே அனைத்து உறவுகளும் எமது சர்வதேச நீதி கோரிய போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.- என்றார்.

# பஸ்ஸில் இருந்து பயணி விழுந்த சம்பவம்; அந்த பஸ்ஸின் சாரதிக்கு விளக்கமறியல்!

## ஒரு மாத காலத்துக்கு பஸ் போக்குவரத்தில் ஈடுபடத் தடை

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

ஹட்டன் தொடக்கம் பொகவந்தலாவ வரையில் போக்குவரத்தில் ஈடுபட்ட தனியார் பஸ் ஒன்றில் இருந்து பயணி ஒருவர் தவறி வீழ்ந்துள்ள நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்த பஸ் சாரதியை எதிர்வரும் 08 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று திங்கள்கிழமை ஹட்டன் நீதிமன்றில் நாரதி முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பொகவந்தலாவையில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் இருந்து நபர் ஒருவர் வெஞ்சர் பகுதியில் தவறி விழுந்த நிலையில், பலத்த காயங்களுக்கு ஆளானார். இந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் அவர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் அவரின் நிலை கவலைக்குரியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த தனியார் பஸ் நுவரெலியாவில் இருந்து வருகைதந்த தேர்வாளர் ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஹட்டன் தொடக்கம் பொகவந்தலாவ வரையிலான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் ஆகையால் இந்த பஸ்ஸை எதிர்வரும் ஒருமாத காலத்துக்கு ஹட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியில் போக்குவரத்தில் ஈடுபட தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் தேர்வாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘இலங்கையர் தினம்’ தேசிய தினத்துக்கான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள கலந்தாய்வு



டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கையர் தின தேசிய தினத்துக்கான கருத்துக்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (25) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவின் அடிப்படையில், இலங்கையில் நல்லிணக்கம் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் தேசிய அடையாளத்தை முழுமையாக்குவதற்கும் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஒரு தொலைநோக்குப் பார்வையாக அந்த அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கும் “இலங்கையர் தினம்” என்னும் தேசிய நிகழ்வை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முழு இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தகவல்களைப் பெற்று டிசெம்பர் மாதம் 3 நாள் நிகழ்வாக இது முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தனித்துவமான கலை, கலாசார, பண்பாடு, பாரம்பரிய விளையாட்டு, கண்டுபிடிப்புகள் போன்ற அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தின் கலைஞர்கள், புது முயற்சிகள், கண்டுபிடிப்புக்கள் யாழ். மண்ணுக்கு உரிய விசேட அறிவு சார் விடயங்கள் , விவசாய நடைமுறைகள், பாரம்பரிய ஆடை அணிகலன்கள், நவீன கலாசார முறைகள், பாரம்பரிய சடங்குகள், தனித்துவமான தாவரங்கள், மிருகங்கள், வரலாறுகள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், விளையாட்டுக்கள், உணவுகள் போன்ற தகவல்களை திரட்டும் முகமாக இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலந்துரையாடலில் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் அனுருத்தனின் பங்குபற்றுதலுடன் புகழ்பெற்ற ஓவியரும் களனி பல்கலைக்கழக பேராசிரியருமான ஜெகத் வீரசிங்க, பல்கலைக்கழக பேராசிரியர் விமல் சுவாமிநாதன் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் , உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பல்துறைசார் ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# நெடுந்தீவு மற்றும் பருத்தித்துறை புதிய பிரதேச செயலர்கள் கடமையேற்பு



நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட என். பிரபாகரன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட என். திருலிங்கநாதன் ஆகியோர் நேற்று (25) யாழ். அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் கடமையேற்றனர்.

இதன் போது மேலதிக அரச அதிபர் கே. சிவகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.



# திகாமடுல்ல மீடியா போரத்தின் ஊடகச் செயலமர்வும் கௌரவிப்பும்



**(றிபாஸ்)**

திகாமடுல்ல மீடியா போரத்தின் அங்கத்தவர்களுக்கான ஊடகச் செயலமர்வும், றிசேட் வழங்கும் நிகழ்வும், கௌரவிப்பும் ஒலுவில் கிரீன்வில்லா ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

போரத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஊடகமும் மொழியும், ஊடகவியலாளர்களின் ஒழுக்கக் கோவை எனும் தலைப்புக்களில் வருகைதரு விரிவுரையாளரும் ஆசிரிய ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெஸ்மி எம். மூஸா, தென்கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறை இருக்கைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் செயலமர்வை நடத்தினர்.

இதேவேளை, போரத்தின் அங்கத்தவர்களுக்கு இலச்சினை பொறிக்கப்பட்ட றிசேட் வழங்கி வைக்கும் நிகழ்வு மற்றும் கௌரவிப்பில் மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.எம். அஸீஸ் பிரதம அதிதியாகவும், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனீபா, அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபீர், வைத்தியர் கே. எல்.எம்.நக்பர், குலோபல் விசன் மாகாண பணிப்பாளர் ஜே. றியாஸ், தொழிலதிபர் அஹமட் ஹஸாரி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சகொண்டனர்.

அமைப்பின் செயலாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.ஜே. எம். ஹனிபா நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.







# நீர் சுத்திகரிப்பு, போட்டோப் பிரதி இயந்திரங்கள் யாழ். மாநகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கல்





யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, சுவிஸ் நாட்டில் இருந்து தாய் நாட்டுக்கு வருகை தந்துள்ள யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த கீதபொன்கலன் ஆனந்தக்குமார் என்பவர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் என்பவற்றை யாழ். மாநகர சபைக்கு வழங்கியுள்ளார்.

இன்று (26) யாழ். மாநகர சபைக்கு வருகைதந்த அவர், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா, பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் ஆகியோரிடம் இவற்றைக் கையளித்தார்.

# பெண் தலைமை, சுயதொழில் முயற்சியாளரது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தத் தளம் இல்லை

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி தெரிவிப்பு




**(த.சுபேசன்)**

அறுபது கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் பெண் தலைமை மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுடைய உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான தளம் இன்மையால் அவர்கள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பொதுச் சந்தை வளாகத்தில் நகர சபையால் வர்த்தக நடவடிக்கைக்காக புதிதாக கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த கட்டடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட வர்த்தகர்கள் பின்னடிக்கின்றனர்.

எனவே வர்த்தகர்கள் அதில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடத் தவறும் பட்சத்தில் உடனடியாக அதனை தென்மராட்சியில் உள்ள உள்ளூர் உற்பத்தி மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுடைய சந்தைப்படுத்தல் நிலையமாக மாற்ற சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்மராட்சில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் தளம் இன்மையால் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி நோக்கி சென்று சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.

சாவகச்சேரியில் சந்தைப்படுத்தல் நிலையம் காணப்படும் பட்சத்தில் அவர்கள் பொருளாதார ரீதியாகவும் முன்னேற முடியும்.– என்றார்.



# ராஜஸ்தானில் கனமழையால் வெள்ளம்: 4 சிறார்கள் உட்பட 6 பேர் உயிரிழப்பு

ராஜஸ்தானில் கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் கனமழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக தவுசாவில் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி வரையிலான 25 மணி நேரத்தில் 29 சென்றி மீற்றர் மழை பெய்துள்ளது. பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

உதய்பூரின் தபோக் பகுதியில் மழை நீர் நிரம்பிய பள்ளத்தில் மூழ்கி 4 சிறார்கள் உயிரிழந்தனர். பண்டியில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 50 வயது பெண் உயிரிழந்துள்ளார். இது போல் சுவர் இடிந்து விழுந்த சம்பவத்தில் 65 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

ஜெய்ப்பூரில் வரலாற்று சிறப்பு மிக்க அஜ்மீர் கோட்டை சுற்றுச்சுவரின் ஒருபகுதி இடிந்து விழுந்ததில் வாகனங்கள் சேதமடைந்தன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணி நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



# பாலியல் புகாரில் சிக்கிய எம்.எல்.ஏ: காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கம்

பாலியல் துன்புறுத்தல் புகார்களில் சிக்கிய கேரளாவின் பாலக்காடு எம்.எல்.ஏ. ராகுல் மாம்கூட்டத்தில், காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கேரளாவின் பாலக்காடு சட்டப் பேரவை தொகுதிக்கு கடந்த ஆண்டு நவம்பரில் நடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸை சேர்ந்த ராகுல் மாம் கூட்டத்தில் வெற்றி பெற்றார்.

இந்த நிலையில், அவர் மீது மலையாள நடிகை ரினி ஆன் ஜார்ஜ் சமீபத்தில் பரபரப்பு குற்றச்சாட்டை சுமத்தினார்.

“காங்கிரஸை சேர்ந்த இளம் தலைவர் (ராகுல் மாம்கூட்டத்தில்) பலமுறை சமூக வலைதளங்கள் வாயிலாக பாலியல் ரீதியான தகவல்களை அனுப்பினார். என்னை ஹோட்டலுக்கு அழைத்தார்” என்று தெரிவித்தார்.

அவரை தொடர்ந்து, எழுத்தாளர் ஹனி பாஸ்கரன், திருநங்கை அவந்திகா மற்றும் காங்கிரஸ் பெண் நிர்வாகிகள் உட்பட பலரும் ராகுல் மீது பாலியல்ரீதியான குற்றச்சாட்டுகளை சுமத்தினர். இதை தொடர்ந்து, கேரள இளைஞர் காங்கிரஸ் பதவியில் இருந்து ராகுல் மாம்கூட்டத்தில் சமீபத்தில் விலகினார்.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்து அவர் நேற்று நீக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து கேரள காங்கிரஸ் தலைவர் சன்னி ஜோசப் கூறும்போது, “ராகுல் மாம்கூட்டத்தில் மீது பொலிஸ் நிலையத்தில் யாரும் புகார் அளிக்கவில்லை. எனினும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானவை. எனவே, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கட்சி அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பதவிகளில் இருந்தும் ராகுல் மாம்கூட்டத்தில் நீக்கப்பட்டுள்ளார்.” என்று தெரிவித்தார்.



# இந்திய கடற்படையில் புதிதாக 2 போர்க்கப்பல்கள் இணைப்பு

ஐ.என்.எஸ். உதயகிரி, ஐ.என்.எஸ். ஹிம்கிரி என்ற இரு போர்க்கப்பல்கள் இன்று கடற்படையில் இணைக்கப்பட உள்ளன.

இந்திய கடற்படையில் 135 இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் உள்ளன. இதில் ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா, ஐ.என்.எஸ். விக்ராந்த் ஆகியவை விமானந்தாங்கி போர்க்கப்பல்கள் ஆகும். 20 நீர்மூழ்கிகளும் கடற்படையில் உள்ளன. எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்திய போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 160 ஆகவும், 2035 ஆம் ஆண்டில் 200 ஆகவும் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக உள்நாட்டிலேயே போர்க் கப்பல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 'புராஜக்ட் 17ஏ' என்ற திட்டத்தின் அடிப்படையில் சிறிய ரகத்தை சேர்ந்த 7 போர்க்கப்பல்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.

இந்த போர்க்கப்பல்களுக்கு நீலகிரி, ஹிம்கிரி, தாராகிரி, உதயகிரி, துனாகிரி, விருதகிரி, மகேந்திரகிரி என்று இந்திய மலைகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள் ளன. ஒவ்வொரு கப்பலும் 4,000 கோடி ரூபா மதிப்பு கொண்டவை ஆகும்.

'புராஜக்ட் 17ஏ' திட்டத்தின்படி ஐ.என். எஸ். நீலகிரி போர்க்கப்பல் கடந்த ஜனவரியில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறும் விழாவில் ஐ.என்.எஸ். உதயகிரி, ஐ.என்.எஸ். ஹிம்கிரி ஆகிய போர்க்கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்பட உள்ளன.

இரு போர்க்கப்பல்களும் 488 அடி நீளம், 58 அடி அகலம் கொண்டதாகும். இவற்றின் எடை 6,670 தொன் ஆகும். இந்த போர்க்கப்பல்களில் பிரம்மோஸ் ஏவுகணைகள், பரக் ஏவுகணைகள், 76 எம்.எம். துப்பாக்கிகள், நீர்மூழ்கிகளை அழிக்கும் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த ஆயுதங்கள் மூலம் எதிரிகளின் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள், எதிரிகளின் கடற்படைத் தளங்களை மிகத் துல்லியமாக தாக்கி அழிக்க முடியும்.

இதுகுறித்து இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

"இந்திய பெருங்கடலில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது. இந்த சூழலில் சீனாவுக்கு இணையாக இந்திய கடற்படையின் பலத்தை அதிகரிக்க மத்திய அரசு அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக உள்நாட்டிலேயே போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள் கட்டப்பட்டு கடற்படையில் அடுத்தடுத்து இணைக்கப்பட்டு வருகின்றன. 'புராஜக்ட் 17ஏ' திட்டத்தில் மொத்தம் 7 போர்க்கப்பல்கள் கட்டப்பட்டு உள்ளன. இதில் ஐ.என்.எஸ். நீலகிரி ஏற்கெனவே கடற்படையில் இணைக் கப்பட்டு விட்டது.

விசாகப்பட்டினத்தில் ஓகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெறும் விழாவில் மேலும் 2 போர்க்கப்பல்கள் இணைக் கப்பட உள்ளன. மீதமுள்ள 4 போர்க்கப் பல்கள் அடுத்த ஆண்டுக்குள் கடற்படையில் இணைக்கப்படும்.'' என்று தெரிவித்துள்ளன.





# வடகொரிய ஜனாதிபதியை சந்திக்க தயாராகிறார் ட்ரம்ப்

பொருத்தமான எதிர்காலத்தில் தாம் வடகொரிய ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், முதல் தடவையாக அவர், தென் கொரிய ஜனாதிபதி லீ ஜே மியுங்கை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்குடனான தனது மிகவும் நல்ல உறவு பற்றி ட்ரம்ப் கருத்துரைத்தார்.

அத்துடன், அந்த உறவு தொடர்ந்தும் நீடிக்கும் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் பொருத்தமான எதிர்காலத்தில் வட கொரிய ஜனாதிபதியை தாம் சந்திக்கவுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.







# ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கவே இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிப்பு

## அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவிப்பு

ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கவே இந்தியாவுக்கு கூடுதல் வரி விதித்ததாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் அளித்துள்ள பேட்டியில்,

"ரஷ்யா-உக்ரைன் இடையிலான மோதல் விரைவில் முடிவடைவதற்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் கடந்த சில வாரங்களில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இந்தியா மீது ட்ரம்ப் 2 ஆவது கட்ட வரி விதிப்பை மேற்கொண்டார். தீவிர பொருளாதார நெருக்கடி தரும் வழிமுறைகளை ட்ரம்ப் பயன்படுத்தியுள்ளார்.

இது ரஷ்யாவின் எண்ணெய் வர்த்தக வருவாயை குறைப்பதற்கான அமெரிக்காவின் நடவடிக்கை ஆகும். கொலை செய்வதை நிறுத்தாவிட்டால் ரஷ்யா கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். தொடர்ந்து ரஷ்யா தனிமைப் படுத்தப்படும்." என்று தெரிவித்துள்ளார்.



# பிரித்தானியாவில் பயிற்சியின் போது ஹெலிக்கொப்டர் விபத்து; மூவர் பலி!

பிரித்தானியாவில் விமான பயிற்சியின் போது 4 பேர் பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கியுள்ளது.

பிரித்தானியாவின் ஜல் ஆஃப் வைட் தீவில் நடந்த விமான பயிற்சியின் போது ஷாங்களின் அருகே இந்த ஹெலிக்கொப்டர் வயல் பரப்பில் விழுந்து விபத்துக்குள்ளானது.

பயிற்றுவிப்பாளர் உட்பட 4 பேர் விமானத்தில் பயணித்த நிலையில், ஒருவர் சிகிச்சைக்காக சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டார். மற்ற மூவரும் உயிரிழந்துள்ளனர்.

ஹாம்ப்ஷயர் மற்றும் ஜல் ஆஃப் வைட் பகுதியை சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் விபத்தின் காரணமாக எ 3020 ஷாங்களின் வீதியை மூடியுள்ளனர்.

விபத்தில் சிக்கிய 4 பேர் சாண்டவுன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டனர் என ஹெலிக்கொப்டரை இயக்கிய நார்தும்பிரியா ஹெலிகாப்டர்ஸ் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 26/08/2025

கனடாவில் நிதி பாரிய மோசடி; 638 மில்லியன் டொலர் இழப்பு

02




# கனடாவில் ஆளுங்கட்சிக்கு குறைந்துவரும் மக்கள் ஆதரவு

## ஆய்வொன்றின் தகவல்

**கனடாவில், ஆளுங்கட்சிக்கு மக்களிடையே ஆதரவு குறைந்துவருவதாக ஆய் வொன்றின் முடிவுகள் தெரிவிக்கின்றன.**

**Abacus Data என்னும் அமைப்பு சமீபத்தில் நடத்திய ஆய்வொன்றில், ஆளும் லிபரல் கட்சியைவிட, எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு மக்களிடையே ஆதரவு அதிகம் உள்ளது என தெரியவந்துள்ளது.**

**பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சிக்கு 39 சதவிகித மக்கள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 41 சதவிகித மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.**

கனடா பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதைத் தொடர்ந்து பிரதமராக பதவியேற்ற மார்க் கார்னி, ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற ஃபெடரல் தேர்தலிலும் வெற்றி பெற்றார்.

ஆனால், விலைவாசி, வீடுகள் பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் மற்றும் புலம்பெயர்தல் ஆகிய விடயங்கள் மீண்டும் தலைதூக்கத் துவங்கியுள்ளன.

ஆளுங்கட்சிக்கு ஆதரவு குறைந்தாலும், பிரதமர் மார்க் கார்னிக்கு மக்களிடையே 48 சதவிகித ஆதரவு உள்ளது. எதிர்க்கட்சித் தலைவருக்கு 40 சதவீத ஆதரவுதான் உள்ளது.

மார்க் கார்னியைப் பொருத்தவரை, அவர் அடுத்த தேர்தலை எதிர்கொள்ள இன்னும் மூன்றரை ஆண்டுகள் உள்ளன. அதற்குள் வாக்காளர்கள் சந்தித்துவரும் பிரச்சினைகளை அவர் தீர்க்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் பாரிய நிதி மோசடி; 638 மில்லியன் டொலர் இழப்பு

கனடாவில் நிதி மோசடி சம்பவங்களில் சிக்கி சுமார் 638 மில்லியன் டொலர்கள் இழக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

கடந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும் கனேடியர்கள் இவ்வாறு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளனர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கனடிய மோசடி தவிர்ப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், நிதி மோசடிகள் கடந்த பத்து ஆண்டுகளில் இருமடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, செயற்கை நுண்ணறிவு மோசடிகள் அதிகரித்துள்ளதாகவும் நிறுவனத்தின் தொழில்நுட்ப நிபுணர் கார்மி லெவி தெரிவித்துள்ளார்.

நிதி சேவைத்துறையில் இது பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கி வருவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

வங்கிப் பணியாளர் அல்லது நிறுவன பிரதிநிதி என தெரிவித்து பணம் அல்லது தனிப்பட்ட தகவல்களை பறிக்கும் இந்த மோசடிகளில் பலர் இலக்காகி வருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# இந்த ஆண்டின் இலையுதிர் காலத்தில் கொவிட் 19 தடுப்பூசி முக்கியமானது


கனடாவில் கோவிட்19 தடுப்பூசி தொடர்பில் விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இலையுதிர் காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட புதிய கோவிட் 19 எம்.ஆர்.என்.ஏ COVID-19 mRNA தடுப்பூசிகள் மிக முக்கியமானவை என தொற்றுநோய் நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

பலர் COVID-ஐ மறந்துவிட்டதாக நினைத்தாலும், இது இன்னும் மிகவும் அபாயகரமான நோயாக இருக்க முடியும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக முதியவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் அதிக ஆபத்தில் உள்ளதாக எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பைசர் மற்றும் மொடர்னா ஆகிய நிறுவனங்களினால் புதிப்பிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கு கனடிய சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தடுப்பூசிகள் புதிய கோவிட் திரிவுகளை கட்டுப்படுத்தக் கூடியவை என தெரிவித்துள்ளனர். குறிப்பாக 65 வயதுக்கும் மேற்பட்டவர்கள் புதிய தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# உக்ரைனுடன் முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் கனடா பிரதமர்

உக்ரைனுடனான ட்ரோன் கூட்டு உற்பத்தி தொடர்பான ஒப்பந்தத்தில் கனேடிய பிரதமர் மார்க் கார்னி கையெழுத்திட்டார்.

கனேடிய பிரதமர் மார்க் கார்னி மார்ச் மாதம் பதவியேற்ற பிறகு உக்ரைனுக்கு முதல் விஜயம் மேற்கொண்டார்.

உக்ரைனின் சுதந்திர தின விழாவில் பங்கேற்ற அவர், ஜெலென்ஸ்கிக்கு எந்தவொரு சமாதானத் தீர்விலும் வலுவான பாதுகாப்பு உத்தர வாதங்களுக்கான உக்ரைனின் கோரிக் கைக்கு ஆதரவளித்தார்.

அத்துடன், துருப்புக்களை அனுப்புவதற்கான சாத்தியத்தை கனடா விலக்காது என்றும் கூறினார்.

ஜெலென்ஸ்கியுடன் கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பேசிய கார்னி,

"கனடாவின் தீர்ப்பில் உக்ரைன் ஆயுதப்படைகளின் பலம் மட்டுமே பாதுகாப்பு உத்தரவாதமாக இருக்க முடியும் என்பது யதார்த்தமானது அல்ல. அதை வலுப்படுத்த வேண்டும்." என்றார்.

இதற்கிடையில் கார்னியும், ஜெலென்ஸ்கியும் ட்ரோன் கூட்டு உற்பத்தி தொடர்பான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டனர்.

அப்போது அறிவிக்கப்பட்ட தொகுப்பில் இருந்து 723 மில்லியன் டொலர் இராணுவ உதவியை உக்ரைன் பெறும் என்று கார்னி தெரிவித்துள்ளார்.



